Sozialkonferenz
Kanton Zürich

# அவசர தேவையில் உள்ளீர்களா?

### சூரிச் மாநில சமூகசேவை உதவி பற்றிய சுருக்கமான தகவல்கள் 2018

அவசர தேவை ஏற்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. தொழில் இன்மை, உடல் நலக்குறைவு, குடும்ப நிலைமை, தனிப்பட்ட நெருக்கடி, தீய பழக்கங்களுக்கு அடிமையாதல் அல்லது குறைந்த வருமானம் போன்றவை ஒரு அவசர தேவையை ஏற்படுத்தலாம்.
பொருளாதாரம் மற்றும் தனிப்பட்ட அவசர தேவைகளில் உள்ளவர்கள் தமது நகரத்திலுள்ள சமூகசேவை உதவி நிலையத்தை நாடலாம்.

## சமூகசேவை உதவி என்றால் என்ன?

### சமூகசேவை உதவி என்பதில் தனிப்பட்ட உதவிகள் மற்றும் பண உதவிகள் அடங்குகின்றன

சமூகசேவை என்பது ஒரு துணை உதவியாகும். எங்கு சொந்த சந்தர்ப்பங்களும் பொருட்களும் தேவைப்படுகின்றதோ, அங்கு இது முதலில் வழங்கப்படும்.
சமூகசேவை உதவி என்பது அவசர நிலைமையை நீக்கி, சொந்தந்தில் வாழ்க்கையை நடத்திச்செல்வதை நோக்கமாகக் கொண்டது.

### தனிப்பட்ட உதவி

தனிப்பட்ட உதவி என்பது ஆலோசனை மற்றும் நாளாந்த விடயங்களில் பராமரிப்பு வழங்குவதாகும். சமூகசேவை உதவி நிலையம் சிறப்பான மற்றும் துறைசார் உதவிகளை வழங்குமென்பதில் உத்தரவாதம் உள்ளது. இந்த தனிப்பட்ட உதவி சொந்த விருப்பத்தின் பேரில் வழங்கப்படுவதுடன், இதற்குக் கட்டணமில்லை. தேவைப்படின் விசேடமான துறைசார் நிலையங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்படும். இதற்கு வழமையாக கட்டணம் செலுத்த வேண்டும்.

### பண உதவி

பொருளாதார உதவி என்பது சமூக வாழ்வுக்கு அத்தியாவசியமான ஆகக்குறைந்ததை நிவர்த்தி செய்யும். எவருக்கு குறைந்த வருமானம் மற்றும் சொத்துக்கள் எதுவும் இல்லாதுள்ளதோ, பொருளாதார உதவிக்காக சமூகசேவை நிலையத்தில் ஒரு விண்ணப்பத்தைச் செய்யலாம். அதன்பின் வாழ்க்கைச் செலவினங்கள், வசிக்கும் செலவு, அடிப்படை மருத்துவப் பராமரிப்பு மற்றும் மேலதிகமான தேவைப்படும் செலவுகளுக்காகப் பணம் வழங்கப்படலாமா எனப் பரிசீலிக்கப்படும்.

### ஆகக்குறைந்த சமூக உதவித்தொகை கணக்கிடப்படல்

சமூக வாழ்வுக்கு அத்தியாவசியமான அடிப்படைச் செலவு, தனிப்பட்ட விதத்தில் SKOS–ஒழுங்குமுறைப்படி (http://richtlinien.skos.ch) தீர்மானிக்கப்படும். சமூகசேவை உதவி நிலையம் விண்ணப்பிக்கும் நபருக்குத் தனிப்பட்ட விதத்தில் மாதாந்த வரவுசெலவைக் கணக்கிடுவர். இந்த வரவுசெலவில் அத்தியாவசியமான செலவுகள் மற்றும் வருமானங்கள் (ஊதியம், நாளாந்தப்பணம், ஓய்வூதியம், ஜீவனாம்சம், பிள்ளைகளுக்கான உதவித்தொகை, உயர்கல்வி உதவி, சேர்ந்து வாழ்பவர்களின் பங்களிப்பு போன்றவை) கணக்கிடப்படும். அத்தியாவசியமான செலவுகளுக்கும் வருமானத்திற்கும் இடையேயான வித்தியாசம் பண உதவியாக வழங்கப்படும். (ஆகக்குறைந்த வருமானம்).

## உங்கள் உரிமைகள்

### அடிப்படைத்தேவையை உறுதிசெய்தல்

மாநிலக் கூட்டாட்சியினதும் சூரிச் மாநிலத்தினதும் அரசியல் யாப்புகள் அவசர வேளைகளில் உதவி வழங்குவதை சட்டத்தால் உறுதிசெய்துள்ளது. மேலதிகமாக சமூக உதவி வழங்க வேண்டியதை சூரிச் மாநிலம் சட்டத்தாலும் கட்டளை விதிமுறையாலும் ஒழுங்கு செய்துள்ளது.

### இரகசியங்கள் பாதுகாக்கப்படலும் கடப்பாடும்

சமூகசேவை நிலையத்தின் ஆண் மற்றும் பெண் அலுவலகர்கள் அலுவலக இரகசியங்கள் வெளியாகாமல் பாதுகாப்பதற்கும், தரவுகளை வெளியிடாமல் இருப்பதற்கும் கடமைப்பட்டவர்கள். இதற்காகத் தேவைப்படும் கடப்பாடு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

### கருத்தைக் கூறுவது
உங்களின் கருத்தை தனிப்பட்ட ரீதியாகக் கேட்டுக்கொள்வதற்கும் சரியான விதத்தில் ஆலோசனை வழங்குவதற்கும் உரித்துள்ளது. உங்களது விடயங்கள் உதவிகளின்போது கவனத்தில் எடுக்கப்படும்.

### ஊக்குவிப்பு நடவடிக்கைகள்
உங்கள் நாளாந்த வாழ்வுக்கு உதவக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. இவை உங்கள் வாழ்க்கை நிலையை திறம்படச் செய்யும் குறிக்கோளாக உதவிக்கொள்ளும். ஒத்துழைத்து முன்னேறுவதற்கான விசேட நடவடிக்கை ஒன்றை நீங்கள் எடுப்பீர்களானால், உங்களுக்கு ஒரு மேலதிக பொருளாதார உதவி வழங்கப்படும். உங்களுக்கு ஒரு தொழில் இடம் இருந்து, அதற்கு மேலதிக பொருளாதார உதவி தேவைப்படின், அதற்கான ஒரு சலுகை உதவியைப் பெற்றுக்கொள்வீர்கள்.

### எழுத்து வடிவில் முடிவு அறிவிக்கப்படல்
பொருளாதார உதவி குறித்து ஒரு எழுத்து வடிவமான முடிவைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாதுவிட்டால், அதை நீங்கள் ஆட்சேபனை செய்யலாம். எங்கு, எப்படி மற்றும் எப்போது நீங்கள் அதைச் செய்யலாம் என்பது அந்த முடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## உங்கள் கடமைகள்

### வெளிப்படுத்தல் மற்றும் ஒத்துழைத்தல்
நீங்கள் உங்கள் வருமானங்கள், உங்கள் சொத்துக்கள் மற்றும் உங்கள் தனிப்பட்ட நிலை குறித்து கட்டாயமாக முழுமையாக மற்றும் உண்மையாக விபரங்களை வெளிப்படுத்த வேண்டும். வாடகை ஒப்பந்தம், மருத்துவக்காப்புறுதி அட்டை, ஊதியப் பட்டியல்கள், நீதிமன்ற முடிவுகள், வங்கிக் கணக்கு அறிக்கைகள் போன்ற படிவங்களை நீங்கள் கட்டாயமாக ஒப்படைக்க வேண்டும். இதில் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாகவும், அலுவலகம் கேட்காமலும் நீங்கள் அறிவிக்க வேண்டும்.

### சொந்த முயற்சி மற்றும் ஈடுபாடு காட்டுதல்
நீங்கள் உங்களது சொந்த மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்த உங்களால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். இதற்க உதாரணமாக, ஒரு தொழிலை ஏற்றுக்கொள்வதுடன் அதில் சேர்ந்து கொள்வதாகும். நீங்கள் அதைச் செய்யாவிட்டால், பொருளாதார உதவிபெறும் உரிமையை இழக்க நேரிடும். உங்களது வாழ்க்கை நிலையைச் சிறப்பிக்கக் கூடிய முயற்சி ஒன்றைச் செய்யுமாறு சமூகசேவை உதவி நிலையத்தால் கேட்கப்படலாம். இந்த முயற்சியை நீங்கள் செய்யாது விட்டால், பொருளாதார உதவி குறைக்கப்படலாம்.

### திருப்பிச் செலுத்துதல்
நீங்கள் பெற்றுக்கொண்ட பொருளாதார உதவியைத் திருப்பிச் செலுத்த நேரிடும், அதாவது நீங்கள்
- பின்பாக அதே காலத்திற்காக ஓய்வூதியம் அல்லது நாள் கொடுப்பனவு அல்லது வேறு கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்டால்,
- பின்னர் சிறப்பானது தொடக்கம் அதி சிறப்பானது வரையான பொருளாதார நிலை ஏற்பட்டால், உ-ம். சொத்துக்களுக்கு வாரிசாகினால், வெகுமதியாகக் கிடைத்தால், உயர் ஊதியம் பெற்றால், அதிஸ்டலாபம் பரிசாகக் கிடைத்தால்.

பெற்றுக்கொண்ட பொருளாதார உதவியை நீங்கள் கட்டாயமாகத் திரும்பிச் செலுத்த வேண்டும்
- எப்படியிருந்த போதிலும், நீங்கள் இவ் உதவியை பிழையான அல்லது முழுமையற்ற தரவுகள் காரணமாகப் பெற்றிருந்தால்,
- நீங்கள் இந்த உதவியை அதற்காக வழங்கப்பட்ட தேவைக்கு மாறாகப் பாவித்திருந்த சூழ்நிலை இருக்குமானால்.

### உறவினர்களின் உதவி
சமூகசேவை உதவி நிலையம், உங்கள் பெற்றோர், உங்கள் பிள்ளைகள் மற்றும் உங்கள் தாத்தா பாட்டி சிறப்பான பொருளாதார நிலையில் வாழ்கின்றார்களா என்பதை பரிசீலிக்கும். தற்சமயம் அப்படியிருந்தால், அந்த உறவினர் தொடர்பு கொள்ளப்படுவார். அவர்களும் நிச்சயமாக, உங்களது பொருளாதார உதவிகளில் குறிப்பிட்ட அளவில் பங்களிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

Sozialkonferenz
Kanton Zürich

### தண்டனைச் சட்டம்

சட்டத்திற்கு முரணான வகையில் பொருளாதார உதவியைப் பெறுவதற்காக நீங்கள் பிழையான அல்லது முழுமையற்ற தரவுகளை வழங்கினால் அல்லது சிலவற்றை மறைத்தால், சமூகசேவை உதவி நிலையத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்படும். சட்ட உரிமையற்ற விதத்தில் சமூகஉதவி பெற்ற குற்றத்திற்காக சட்டவிதி 148 a சட்டவிளக்கப்புத்தக விதிப்படி தீர்ப்பளிக்கப்பட்டால், உங்களுக்கு ஒருவருடம் வரையான மறியற் தண்டனை அல்லது பணத் தண்டனை விதிக்கப்படலாம். ஒரு வெளிநாட்டவராக இருந்தால் சுவிசில் உங்கள் வதிவிட உரிமையை இழக்க நேரிடலாம். நீங்கள் வெளியேற்றப்படுவதுடன் 5 இருந்து 15 வருடம் வரை நாட்டிற்குள் திரும்ப நுழையத் தடை விதிக்கப்படலாம்.

## செயல்முறை உதவிக் குறிப்புகள்

### நீங்கள் ஒரு அவசரத் தேவையில் இருப்பீர்களானால்:

- நீங்கள் உரிய நேரத்துடன் சமூகசேவை உதவி நிலையத்துடன் தொடர்பை ஏற்படுத்துங்கள்.
- சமூகசேவை உதவி நிலையத்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு நேரில் செல்வதற்கு ஒரு தவணையை ஏற்படுத்துங்கள்.
- முதல் கலந்துரையாடலின்போதே, உங்கள் தனிப்பட்ட மற்றும் பொருளாதார நிலையை விளக்குவதற்கான அனைத்துப் பத்திரங்களையும் எடுத்து வாருங்கள்.

### தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்:

- ஒரு பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பதற்கு பெறும் தனிப்பட்ட கடன்கள் உங்கள் நிலைமையை மோசமாக்குவதுடன் மேலும் கடனாளியாகும் நிலைக்கு இட்டுச்செல்லும். சமூகசேவை உதவி நிலையம் உங்களுக்கு சிறப்பாக உதவி வழங்க முடியும்.
- முதல் கலந்துரையாடலின்போதே அதாவது நீங்கள் வேறு நிலையங்களுடன் (உ-ம். பிள்ளைகள்- மற்றும் இளையோர் உதவிநடுநிலையம் kjz, பிள்ளைகள்- மற்றும் வயதுவந்தோர் பாதுகாப்புத் திணைக்களம் KESB, IV-நிலையம், RAV, தனிப்பட்ட அல்லது பொதுப்பணி துறைசார் நிலையங்கள்) தொடர்பைக் கொண்டுள்ளீர்களா என்பதைத் தெரியப்படுத்துங்கள்.
-

## எங்கு எனது சமூகசேவை உதவி நிலையம் உள்ளது?

நீங்கள் வசிக்கும் நகரத்திலுள்ள பராமரிப்புப் பகுதி-/ சமூகத் திணைக்களம், சமூகசேவைப்பகுதி அல்லது சமூகசேவை உதவி நிலையம் உங்களுக்குப் பொறுப்பானது. தற்சமயம் சந்தேகம் இருந்தால் நகரசபை உங்களுக்கு இதுகுறித்து விளக்கமளிக்கும். சூரிச் நகரத்தில் நீங்கள் வசிக்கும் முகவரிக்குப் பொறுப்பான சமூகநடுநிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

### எமது நகரத்தில் பொறுப்பு வகிப்பது:

________________________________________________________________________________

________________________________________________________________________________

### சமூகஉதவி குறித்த தகவல்களை நீங்கள் இணையத்தளத்திலும் காணலாம்:

சூரிச் மாநில சமூகஉதவித்-திணைக்களக் கைநூல்: www.sozialhilfe.zh.ch
சூரிச் மாநில சமூகமாநாடு: www.zh-sozialkonferenz.ch
சமூகஉதவிக்கான சுவிஸ் மாநாடு: www.skos.ch

பதிப்புரிமை:
வெளியிட்டு வைத்தது:
சூரிச் மாநில சமூகமாநாடு

மாநில சமூகஉதவித்-திணைக்களம் சூரிச்
2018, புதிய பதிப்பு